**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Summary Trial case No: | STC.1054/2024 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.2 |
| Name : | குணசீலன் |
| Father's Name/Husband Name: | குணசேகரன் |
| Village : | வடக்கலூர் |
| Taluk : | குன்னம் |
| Age : | 32 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 03.06.2026

**(1969-ம் ஆண்டின் 54வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி பச்சமுத்து ஆஜர் )**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது உறவினர். அ.சா.1 என்னுடைய அம்மா. எங்களுக்கு சொந்தமான இடத்தை நான் வீடு கட்டிக் கொண்டிருந்தேன் அப்போது ஆஜர் எதிரி அங்கு வந்து அடிக்கடி பிரச்சனை செய்து வந்தார். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு காலை 07.00 மணியளவில் சம்பவயிடம் வந்த எதிரி எங்களிடம் பிரச்சனை செய்தார், ஏன் பிரச்சனை செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு ஆஜர் எதிரி என்னுடைய அம்மா அ.சா.1ஐ அசிங்கமாக திட்டி கையால் அடித்துவிட்டார்.

அதன்பிறகு காவல் நிலையம் சென்று எனது அம்மா சம்பவம் குறித்து புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரி திட்டியதாக சொல்லப்படும் ஆபாச வார்த்தைகள் குறிப்பிட்டு எந்த வார்த்தைகள் என்று நான் போலிசார் விசாரணையிலோ, புகாரிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி அடித்ததால் எனது அம்மா எந்த மருத்துவமனையிலும் சிசிக்சை எடுத்துக் கொள்ளவில்லை என்றால் சரிதான். அ.சா.1ன் உடலில் எந்த இடத்தில் எதிரி அடித்தார் என்பதையும் போலிசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி அடித்ததால் அ.சா.1ற்கு வலி ஏற்பட்டதாக போலிசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரி அ.சா.1 ஐ ஆபாச வார்த்தைகளால் திட்டி அடிக்கவில்லை என்றாலும், அதனால் தான் அந்த ஆபாச வார்த்தைகளை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும், எதிரி அடிக்கவில்லை என்பதால் தான் அ.சா.1 மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றாலும் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.